## வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" மன்றத்திற்கு அவசியமாக உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 நவம்பர் 24 ஆம் திகதிய 1368/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் காப்புறுதிக் கம்பனிகளால் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 51,719,745 இற்கு சமமான 02 சதவீத பங்களிப்பின் சரியான தன்மை தொடர்பான வலியுறுத்தலுடன் காப்புறுதிக் கம்பனிகளின் தரகுக் கணிப்பீடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை, | அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுடனும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | வருமானம் இனங்காணப்பட்டு முறையாக கணக்குகளிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | மன்றத்தின் செயலாற்றல் அறிக்கைகள் காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஆனால் மீளாய்வாண்டின் போது மன்றத்தால் எந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயன்முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டங்கள் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 25,998,075 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 61,863,867 ஆக இருந்தமையால் முன்னைய ஆணடுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 35,865,792 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா 61,429,545 ஆன முன்னைய ஆண்டின் மிகையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டின் போது மன்றத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளுதல் தொடர்பாக மூலதனச் செலவினங்கள் ஏற்பட்டமை போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 35,865,792 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான சட்டத்தின் (அத்தி. 203) பிரகாரம் வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய ஆணைக்குழு நிறுவப்படும் நோக்கத்துடன் தேசிய மன்றம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 15 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் நிறுவனம் ஒரு ஆணைக்குழுவாக நிறுவப்பட்டிருக்காததால் இந்த மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சட்டப்பூர்வ அதிகாரங்கள் எதுவும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் முறையான பதவியணியினர் நியமனம் தடைபட்டிருந்தது. | போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் திருத்தப்பட்ட பின்னர் குறித்த வரைவுச் சட்டம் மீண்டும் 2022.05.23 இல் சட்ட வரைஞரிற்கு அனுப்பப்பட்டது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய ஆணைக்குழுவை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வாகனங்களின் எண்ணிக்கை, அந்த வாகனங்களின் அம்சங்கள், வீதி விபத்துக்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்ளூர் மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள் உள்ளடங்கிய தரவுத்தளத்தைப் பேணுதல்; வீதி பாதுகாப்பு தொடர்பான நூலகத்தை பேணுதல்; இணைக்கப்பட்ட பாடங்களில் ஆராய்ச்சிகளுக்கு நிதி உதவி வழங்குதல்; சர்வதேச சகாக்களுடனான தொடர்பு; அறிவு பரிமாற்றம்; வீதி பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்களை தயாரித்து செயற்படுத்துதல்; அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையேயான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு; மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பாக | இது 2021.08.06 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மன்றத்தின் தாள் இல. 2021-16/05-09 மூலம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தேசிய மன்றத்தின் இலத்திரனியல் நூலகத்தின் மூலம் அந்தத் தரவுகளை அணுகுவதற்கு ஒத்த நிறுவனங்களுடன் உடன்படிக்கையொன்றை தயாரிப்பதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அரசாங்கத்திற்கு அறிவுறுத்துதல் போன்ற 2005 ஏப்ரல் 04 ஆம் திகதிய 1387/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் ஒதுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட முடியாதிருந்தன. | | |
| (ஆ) ரூபா 51,719,745 கூட்டுமொத்தமான பங்களிப்புக்கள் மீளாய்வாண்டில் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 6,375,000 தொகை பெறுவனவுகளின் 13 சதவீதத்தை பிரதிபலிக்கும் வகையில் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் வீதி விபத்துக்களுக்கு இழப்பீடு கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக மக்களிடம் போதியளவு விழிப்புணர்வு இல்லாததே இதற்குக் காரணமாகும். | கடந்த 06 ஆண்டுகளில், 353 மோதிச் செல்லும் விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அவற்றில் 322 தொடர்பான விண்ணப்பங்கள் 2021.12.31 அளவில் பெறப்பட்டன, இது 91 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதில் 268 விண்ணப்பங்களுக்கு இழப்பீடு ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 காரணமாக நடாத்த முடியாத இழப்பீடு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. | இழப்பீடு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பரில் ஜப்பானில் இருந்து நன்கொடையாக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெறப்பட்ட drives ஐப் பயிற்றுவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ரூபா 5,875,351 பெறுமதியான உபகரணங்கள் உத்தேசித்த நோக்கத்திற்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பயிற்சி நடவடிக்கைகள் 2019 யூன் 21 இல் நிறுத்தப்பட்டதால் குறித்த உபகரணங்கள் விளைவற்றிருந்தன. | போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் இலங்கை போக்குவரத்து சபையின் பயிற்சி பாடசாலைகளுக்காக இவ் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தேவைப்பாடுகளை சரியாகக் இனங்கண்டு தற்போதுள்ள சொத்துக்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை வலுப்படுத்துவதற்கு போதுமான பதவியணியினர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் | மன்றத்திற்கான பதவியணியினர் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மன்றமானது போக்குவரத்து அமைச்சு, இலங்கை புகையிரதம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியவற்றிற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் அமைய தொழிலாளி ஓரவர் ஆகியோருடன் பேணப்பட்டு வந்தது. | பதவியணியினரின் அங்கீகாரம் கோரும் அறிக்கைகள் 2022.04.06 இல் போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் பொதுக் கணக்குகள் குழு வழங்கிய பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, 2021 யூலையில் திருத்தப்பட்ட பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு, அதிவேகமாகச் செல்லும் வாகனங்களால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. எனினும் 2021 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 150 மில்லியன் தொகை உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டது. இதனால் 2021 ஆம் ஆண்டிற்கான சபையினால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீடும் செயல்நடவடிக்கைத் திட்டமும் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவிகொள்றாக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், வீதிப் பாதுகாப்பு குறித்த செயற்திறனான நிகழ்ச்சித்திட்டங்களைச் அமுல்ப்படுத்துவதன் மூலம் விபத்துகளைக் குறைப்பதற்கான புதிய முன்மொழிவுகளை மன்றம் மேற்கொண்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, முன்னைய ஆண்டுகளில் செயற்படுத்த முடியாத நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக பட்டியலிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு விவரக்குறிப்புகளைத் தயாரித்து மேலதிக நடவடிக்கைக்காக பெறுகை குழுவுக்கு அனுப்பியுள்ளது. | மீண்டும் மீண்டும் செயற்படுத்த முடியாத செயற்பாடுகளுக்கு மாற்றீடாக அத்தியாவசியப் பணிகளுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றம் 2021 சனவரி 13 இலேயே பாதீட்டினை அங்கீகரித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் என்பி/5பி/5டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | N.C.R.S. போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. எனவே, போக்குவரத்து அமைச்சால் தயாரிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தில் வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்துடன் தொடர்புடைய முன்மொழிவுகள் உள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்ட பின்னர் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |